MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 18-07-2021 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | பிலவ வருடம் (ஆடி 4) | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 58 | இதழ் 25<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர் : பேரருள்பணி ஆ.அருளானந்தம்<br>துணை ஆசிரியர் : அருள்பணி இர.ஜெயந்த் ராயன் |
|---|---|---|---|---|


## ஆகஸ்ட் 7ல், உலகின் நலவாழ்வுக்காக இந்தியத் திருஅவை செபம்

கொரோனா பெருந்தொற்றால் உயிரிழந்த ஆன்மாக்கள் நிறையமைதி அடையவும், அவர்களின் இழப்பால் வருந்தும் குடும்பங்கள், மற்றும் குழுமங்களுடன் தோழமையை வெளிப்படுத்தவும், உலகின் நலவாழ்வுக்காகவும், தேசிய அளவில் இறைவேண்டல் நாள் ஒன்றை CCBI எனப்படும் இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர் பேரவை அறிவித்துள்ளது.

வருகிற ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி, சனிக்கிழமை இந்திய நேரம் இரவு 8.30 மணி முதல், 9.30 மணி வரை, தேசிய அளவில் ஒரு மணி நேரம் இறைவேண்டல் நடைபெறும் எனக் கூறியுள்ள ஆயர் பேரவை, அந்நேரத்தில் வேறு எந்த நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்யவேண்டாம் என, அனைத்து மறைமாவட்டங்கள், துறவு சபைகள், பக்த சபைகள், மற்றும், கத்தோ-க்க இயக்கங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

புனித தோமையார், புனித பிரான்சிஸ் சேவியர், புனித அன்னை தெரேசா ஆகியோரின் கல்லறைகளிலும், பாண்ட்ரா (மும்பை), சர்தானா (மீரட்), சிவாஜி நகர் (பெங்களூர்), வேளாங்கண்ணி (தமிழகம்) ஆகிய நகரங்களிலுள்ள அன்னை மரியா பசி-க்காக்களிலும், ஒரு மணி நேர இறைவேண்டல் நடைபெறும். திருநற்கருணை ஆசீரோடு நிறைவடையும் இந்த வேண்டல், மாதா, ஷலோம், குட்னெஸ், பிரார்த்தனா பவன், தியாவானி போன்ற கத்தோ-க்கத் தொலைக்காட்சிகள், முக்கிய கத்தோ-க்க யூடியூப் வலைக்காட்சிகள் ஆகியவை வழியாக, நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

வருகிற ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி நடைபெறவுள்ள இந்த இறைவேண்டல் நிகழ்வில் அனைவரும், குறிப்பாக, குடும்பங்களும், துறவு சபை குழுமங்களும் கலந்துகொள்ளுமாறும், வெளிநாடுகளில் வாழ்கின்ற தங்களின் உறுப்பினர்களும் இதில் இணையத் தூண்டுமாறும், CCBI ஆயர் பேரவை அழைப்புவிடுத்துள்ளது.

ஜூலை 10, கடந்த சனிக்கிழமையன்று வெளியிடப்பட்ட இறைவேண்டல் குறித்த இந்த அறிக்கையில், CCBI ஆயர் பேரவையின் தலைவர் கோவா மற்றும், டாமன் பேராயர் பி-ப் நேரி ஃபெராவோ, உதவித் தலைவர் சென்னை-மயிலைப் பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி, பொதுச் செயலர் டெல்- பேராயர் அனில் கூட்டோ ஆகிய மூவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

## நலஆதரவுப் பணி என்பது ஒரு விலைமதிக்க முடியாத கொடை



உரோம் நகரின் ஜெமெல்- மருத்துவமனையில், பெருங்குடல் பிரச்சனை தொடர்பான நோய்க்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, அங்கேயே ஓய்வெடுத்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அங்கிருந்தே இஞ்ஞாயிறன்று வழங்கிய மூவேளை செப உரையில், இஞ்ஞாயிறு நற்செய்தி வாசகம் வழங்கிய, "உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்." (மாற்கு 6.13) என்ற வாக்கியத்தை தன் மையக்கருத்தாக எடுத்துக்கொண்டு, கருத்துக்களை பகிர்ந்துகொண்டார். இயேசுவால் அனுப்பப்பட்ட சீடர்கள், உடல் நலமற்ற பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தியதாக கூறுவதில் நாம் காணும் எண்ணெய் என்பது, நோயில் பூசுதல் என்ற அருளடையாளத்தை குறித்து நிற்பதாக உள்ளது என உரைத்த திருத்தந்தை, உடலுக்கும் உள்ளத்திற்கும், ஆறுதலையும் ஊக்கத்தையும் தரும் இந்த எண்ணெய், நோயாளிகள் மீது காட்டப்பட வேண்டிய அக்கறையையும் உள்ளடக்கியதாக உள்ளது என்று விளக்கினார். எண்ணெய் பூசிக் குணப்படுத்த-ல் வரும் எண்ணெய் என்பது நோயுற்றோருக்கு செவிமடுத்தல், அவர்களுடன் நெருக்கமாக இருத்தல், அக்கறை காட்டுதல், கரிசனையுடன் செயல்படுதல் போன்றவைகளையும் குறிப்பிடுகிறது. ஏனெனில், இது வ-யைப் போக்கும் வகையில் வருடிக்கொடுப்பதாகும் எனவும் தன் மூவேளை செப உரையின்போது எடுத்துரைத்தார்.

சிறிது நாட்களிலோ அல்லது பலகாலம் கடந்தோ அனைவருக்கும் நோயில் பூசுதல் என்ற அருளடையாளம் தேவைப்படலாம். அல்லது நாம் யாருக்காவது இதனை வழங்க வேண்டியிருக்கலாம். அத்தகைய வேளைகளில் உதவி தேவைப்படும் உள்ளங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வழியாகவோ, அவர்களை நேரில் சென்று சந்திப்பதன் வழியாகவோ, உதவிக்கரம் நீட்டுவதன் வழியாகவோ, நம்மால் இதனை வழங்கமுடியும் என எடுத்துரைத்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்நாட்களில், நல ஆதரவுப் பணிகளின் முக்கியத்துவம் குறித்தும், அது விலைமதிக்க முடியாத கொடையாக உள்ளது என்பதையும், அது என்ன விலைகொடுத்தும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையும் அனுபவம் வழியாக தான் உணர்ந்துகொண்டதாகக் கூறியத் திருத்தந்தை, இதற்கு அனைவரின் பங்களிப்பும் தேவைப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார். மருத்துவர், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், என அனைவருக்கும் தன் பாராட்டுக்களையும் ஊக்கத்தையும் வழங்குவதாக மூவேளை செப உரையின் இறுதியில் எடுத்தரைத்த திருத்தந்தை அவர்கள், உடல் நலமற்றோர் எவரும் தனிமையில் விடப்படக்கூடாது என்பதை மனதில்கொண்டு, செவிமடுத்தல், அக்கறை காட்டுதல், அருகி-ருத்தல் என்ற, நோயில் பூசுதல் வழியாக உதவுவோம் எனவும் விண்ணப்பித்தார்.

ஆசிரியர் பேனா...

# இராஜராஜ சோழனுக்கு ஒரு சந்தேகம்

**வரலாறு:** உலகம் எத்திசைக்கும் தமிழரின் பெருமையை நிலை நாட்டியவர் இராஜராஜ சோழன். வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரிவரை பரந்திருந்தது அவர் பேரரசு. இந்தியப் பெருங்கட-ல் உள்ள அனைத்துத் தீவுகளிலும் வாணிபத்தின் வழியாக தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்தியவர். செல்வம் குவியலாக குவிக்கப்பட்டுக் கிடந்தது. தமிழும், தமிழ் மறையும் மக்கள் வாழ்வோடு பிண்ணிப் பினைந்திருந்த காலம் அது. இமயம் வரைச் சென்று கல் எடுத்துவந்து தஞ்சையிலே அழியாத சிறப்புமிக்க கோயிலைக் கட்டியவர். அதிலே ஆதி அந்தம் இல்லாத சிவனை தன் தெய்வமாக வைத்து வழிபட்டவர்.

**பேரரசரின் சந்தேகம்:** இந்தப் பேரரசனுக்கு ஒரு பெரிய சந்தேகம், அதைத் தீர்த்து வைப்பவருக்கு ஆயிரம் பொன் பரிசு அறிவிக்கப்பட்டது. "அனைவரையும் மகிழ்விக்கும் பொருள் எது?" என்பதுதான் பேரரசருடைய சந்தேகம். பேரரசரின் சந்தேகத்தைப் போக்க பல பொருட்கள் கொலு மண்டபத்தில் வைக்கப்பட்டன. அரசரின் மனதையும் கவனத்தையும் ஈர்த்த பொருள் ஒரு சிவ-ங்கம். அதன் கீழ்ப்பகுதியிலே சிறுவனுக்கு ஒரு தாய் உணவூட்டுவதைப் போன்ற சிற்பம். அதன் அடியிலே 'அன்பே சிவம்' என்று எழுதப்பட்டிருந்தது.

**சந்தேகம் தெளிவு:** அதற்கான விளக்கத்தை அந்த சிலையை வடித்த ஏழைச் சிற்பி சொன்னான். "அன்பை மட்டும்தான் கண்தெரியாதவர்களும், காது கேட்காதவர்களும், வாய் பேச முடியாதவர்களும் உணர முடியும். அதுபோல உடல்நலம் இல்லாதவர்கள் அன்பைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அன்பு மட்டுமே உலகில் சிறந்தது. அன்பிருந்தால் எதிரியையும் நண்பனாக்க முடியும்; அன்பு இல்லையேல் நண்பனும் எதிரியாவான். அனைத்து உயிரினங்களுக்கும் மகிழ்ச்சியை தரக்கூடியதும் அன்பே. அன்புதான் இறைவன்; அதனால்தான் சிவ-ங்கத்தின் கீழே தாயன்பு கொண்ட ஒரு பெண்மணியை வடிவமைத்தேன்" என்று அன்பைப் பற்றி மறுக்க முடியாத விளக்கத்தைத் தந்தார்.

**இன்றைய எதார்த்தம்:** மகிழ்ச்சியான வாழ்வு வேண்டும் என்று விரும்பி பலர் மகிழ்ச்சியை இழந்து கிடக்கின்றனர். ஓய்வின்றி பலமணிநேரம் உழைத்து சம்பாதிப்பவரும் மகிழ்ச்சியாக இல்லை. கடல் நீரைக் குடித்தவருக்கு தாகம் தீராததுபோல செல்வம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு தீர்வதில்லை. வேலை தேடிச் சோர்ந்து போனவர்களும், குறைந்த ஊதியம் வாங்குபவர்களும் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் மகிழ்ச்சியை இழந்து வேதனையுறுகின்றனர். கோடி கோடியாய் செல்வம் சேர்த்தவர்களும் மகிழ்ச்சியடைவதில்லை.

**உண்மையைப் புரிந்து கொண்டவர்கள்:** வணிக உலகில் உச்சம்தொட்ட ஆப்பிள் நிறுவனத்தின் அதிபர் ஸ்டீவ் ஜாப்ஸ் இறப்பதற்கு முன்னால் தன் அனுபவத்தில் இருந்து கொடுத்துச் சென்ற அறிவுரையை நாம் நினைவிற் கொள்வது நன்மை பயக்கும். "புகழும், செல்வமும், பெருமையும் அர்த்தமற்றவை. பணம் தற்கா-கமான மகிழ்ச்சியைத் தரும், பணத்தினால் நிரந்தரமான எதை ஒன்றையும் வாங்க முடியாது. வாழ்க்கையில் எல்லோருடனும் அன்புடன் பேசிப் பழகுங்கள்" என்பது அவருடைய அறிவுரை.

''எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள் மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது'' (லூக்.12.15) என்ற இயேசுவின் அருள்மொழி உண்மை என்பதை சோழப் பேரரசனும், மாவீரன் அலெக்சாண்டரும், வணிக உலகின் உச்சிக்கு ஏறிச் சென்ற ஸ்டீவ் ஜாப்சும் உணர்ந்து கொண்டார்கள்.

**ஏழ்மை:** பெருந்தொற்றின் பாதிப்பினால் உலகளாவிய ஏழைகளின் எண்ணிக்கைக் கூடி இருக்கிறது. இந்த ஏழைகள் ஒரு நாளைக்கு இரண்டு டாலருக்கும் (ரூ.149.16) குறைவான வருவாயில் பிழைப்பு நடத்துபவர்கள். இப்படி ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டவர்களில் 57 சதவீதத்தினர் இந்தியாவில் உள்ளனர். தற்சமயம் இந்தியா ஏழைகள் மிகுந்த நாடாக land of the "mass poor" இருக்கிறது. (Indian current, Issue 28, 5-11 July 2021, Archbishop Thomas Menamparampil, A populist or performer?)

**காரணமும், தீர்வும்:** ஏழ்மைக்கு காரணமாகவும், வளர்ச்சிக்குத் தடையாகவும் மக்கள் தொகைப் பெருக்கம் இருப்பதாக வாதிடப்படுகிறது. அமெரிக்கா, சீனாவோடு ஒப்பிடும் போது 5- பங்கு நிலப்பரப்பைக் கொண்டுள்ள இந்தியா, சீனாவுக்கு அடுத்தபடியாக (சீனா 144 கோடியே 49 இலட்சம்) 139 கோடியே 36 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா, சீனா ஆகியவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) முறையே 20.49 டிரில்-யன் டாலர், மற்றும் 13.40 டிரில்-யன் டாலர். ஆனால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.72 டிரில்-யன் டாலர். இந்தியாவில் பெரும்பகுதியினர் ஏதோ வாழ்கிறார்கள் என்ற நிலையே உள்ளது. எனவே நாடு வளர்ச்சி அடையவும், தனி நபர்கள் மகிழ்ச்சியோடு வாழவும் இப்போது இருக்கும் 139 கோடியே 36 லட்சமாக இருக்கும் இந்தியாவின் மக்கள் தொகையை 70 அல்லது 75 கோடியாக குறைக்கப்பட வேண்டும் என்று முன் மொழியப்படுகிறது. (தினமணி, விழுப்புரம் 10, ஜூலை 2021 கி. சிவசுப்பிரமணியன், மக்கள் தொகையும் மகிழ்ச்சிகர வாழ்வும்) இதற்கான முன்னெடுப்புக்களை அரசு எடுக்க ஆரம்பித்துவிட்டது. அதன் முன்னோட்டமாக உத்தர பிரதேச (UP) அரசு இரு குழந்தைகள் வரைவுத் திட்டத்தை சட்டமாக்க முயற்சிக்கிறது. அதன்படி அரசு வேலைவாய்ப்பு, சலுகைகள் பதவி உயர்வு, உள்ளாட்சி அமைப்புக்களில் போட்டி போன்றவை இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருந்தால் கிடைக்காது. (The Hindu, July 11, 2021 U.P. law pairel moots proposals to pormote two child norm).

ஏழ்மை இல்லாமல் போகவும், எல்லோரும் மகிழ்ச்சியாக வாழவும் தேவையானது இளகிய மனித இதயமே. தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்று சொல்லும் கடவுளைப் பிரதிப-ப்பவராக செல்வந்தர்களும், சமூக, அரசியல் தலைவர்களும் மாறவேண்டும். தேனொழுகப் பேசுவதை விடுத்து மனமுறுக மக்களை அன்பு செய்ய நாம் நம்மையே பண்படுத்திக்கொள்வோம். நம் வீட்டு வாச-லே கிடக்கும் ஏழை இலாசரைக் கண்டுகொள்ள கண்களையும், மனங்களையும் திறப்போம். செல்வம் படைத்தவர்கள் ஏழையருக்கு அன்பு காட்டவில்லை என்றால் அவர்களுக்கு நற்கதி கிடைக்காது. (லூக்.16.19-31).

இயேசுவின் அறிவுரையை ஒவ்வொருவரும் பின்பற்றுவது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழி "மண்ணுலகில் உங்களுக்கென செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும், திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால், விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள், அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை, திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை." (மத்.6.9-21). விண்ணுலகில் செல்வத்தை சேர்த்து வைக்கும் ஒரே வழி ஏழையரைப் பற்றியும் தேவையில் இருப்பவரைப் பற்றியும் அக்கறை கொள்வதும் அவர்களிடத்தில் அன்பு பாராட்டுவதும்தான் (மத்.25.31-46).



# பசியும் — நிறைவும்



அருள்திரு. S. ஜான்சன்
உதவி பங்குத்தந்தை, ரெட்டியார்பாளையம்.

I 2அர. 4:42-44 எபே.4:1-6 யோவா. 6:1-15 25-07-2021

இறையேசுவில் பிரியமானவர்களே!

'அப்பத்தின் வீடு' என்று பொருள்படும் 'பெத்லகேம்' என்ற ஊரில் பிறந்ததால் என்னவோ, இயேசு சென்ற இடமெங்கும் மக்களின் பசியை ஆற்றினார் என சிந்திக்க தோன்றுகிறது. இன்றைய வாசகங்கள் அனைத்தும் உணவு, பசி, நிறைவு என, நம் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருப்பதுபோல, நகர்கின்றன. பகல்-இரவு, இன்பம்-துன்பம், பசி, தாகம் - நிறைவு என நம் வாழ்க்கை மாறிக்கொண்டே இருக்கின்றது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இந்த மாற்றம் என்ற எதார்த்தத்திற்குள் சிக்கிக்கொள்கிறோம். இதை கடவுளின் அருளோடு கடப்பதே நமக்கு நிறைவைத் தரும்.

**வயிறார உண்டனர்:** இன்றைய முதல் வாசகத்தில் எ-சாவின் அரும் செயல் ஒன்றைப் பற்றி வாசிக்கின்றோம். எ-சா வெறும் இருபது கோதுமை அப்பங்களையும், ஒரு கோணிப்பை தானியக் கதிர்களையும் கொண்டு ஏறக்குறைய 100 பேருக்கு பசியாற்றும் நிகழ்வுதான் இது. நிகழ்வின் தொடக்கத்தில் பசி இருந்தது, ஆனால் இறுதியில் நிறைவு இருக்கிறது. இன்றைய நற்செய்தி வாசகத்திலும், இயேசு ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு உணவளிக்கும் அல்லது பசியாற்றும் நிகழ்வை வாசிக்கின்றோம். இங்கேயும் நிகழ்வின் தொடக்கத்தில் தேடலும், பசியும் இருந்தன. ஆனால், முடிவில் நிறைவு மட்டுமே இருக்க காண்கிறோம். இரண்டு நிகழ்விலுமே கடவுள், மக்களுக்கு வயிறார உணவளிக்கின்றார். இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் எபேசு நகர மக்களுக்கு கூறுவது போல, எல்லோருக்கும் மேலானவராக, எல்லோர் மூலமாகவும் செயலாற்றக்கூடிய, எல்லோருக்குள்ளும் இருக்ககூடிய, கடவுளும் தந்தையுமானவர் ஒருவராலே, (எபே.4.6) மக்களின் பசி போக்கி, வயிறார உணவளிக்க முடியும். கடவுளைத் தேடுபவர்கள், சார்ந்து இருப்பவர்கள், நிச்சயம் நிறைவை நோக்கிப் பயணிக்க முடியும்.

**பசி:** பசியை வழக்கமாக மூன்று நிலைகளில் புரிந்து கொள்ளலாம். ஒன்று, 'நாமே வ-ந்து ஏற்கும் பசி', அதாவது நோன்பு. நோன்பு இருத்த-ன் வழியாக, நான் விரும்பி உணவை மறுக்கிறேன், பசியை விரும்பி ஏற்கிறேன். இரண்டு 'புகுத்தப்படும் பசி' - வறுமை, ஏழ்மை, புலம் பெயர்தல், இயற்கைச் சீற்றம், ஊரடங்கு போன்றவற்றால் பாதிக்கப்படும் பலர் பசியோடு இருக்கின்றனர், தூங்குகின்றனர், வேலை செய்கின்றனர், சிலர் இறந்தும் விடுகின்றனர். மூன்று, 'பரிந்துரைக்கப்படும் பசி'- மருத்துவமனைகளில் நாம் இரத்தப் பரிசோதனை செய்வதற்கு முன், அல்லது சில மருந்துகள் எடுக்கும் முன், அல்லது அறுவைச் சிகிச்சைக்கு முன், நம் உடல் பருமனைக் குறைக்க என்னும் பல காரணங்களுக்காக பசி பரிந்துரைக்கப்படுகிறது.

இன்றைய வாசகங்களில் நாம் பார்க்கும் பசி, நிறைவுக்காக தேட-ல் தொடங்கி, இறை அடியாரிடமும் (முதல் வாசகம்), இறைவனிடமும் (நற்செய்தி வாசகம்) முடிவடைகிறது. இவர்களில் பசி என்ற உணர்வு, அவர்களின் கையறுநிலையை, நொறுங்கு நிலையை, சார்பு நிலையை குறிக்கின்றது. ஆகையால்தான், இயேசு மறுகரைக்குச் சென்றவுடன் அவரை நோக்கி மக்கள் கூட்டம் ஓடுகின்றது. "என்னிடம் வருபவருக்கு பசியே இராது" (யோ.6.35) என்ற இயேசுவின் வாக்கு, அவராலே மெய்ப்பிக்கப்படுகிறது.

**பசியும் - ஆசையும்:** தொடக்க நூ-ல், ஆதாமும், ஏவாளும் கடவுளால் உண்ணக்கூடாது என்று விலக்கப்பட்ட கனியை உண்கின்றனர். இங்கே உணவு என்பது ஆசையை மையப்படுத்தியதாக இருக்கிறது. ஏனெனில், அவர்கள் பசிக்காக உண்ணவில்லை, மாறாக ஆசைக்காக - கடவுளைப் போல் ஆக வேண்டும், நன்மை தீமை அறிய வேண்டும் என்னும் ஆசைக்காக உண்கின்றனர். இன்றைய நற்செய்தி வாசகத்தில் உணவு, பசியை மையப்படுத்தியதாக இருக்கிறது. மக்கள் கூட்டத்தினர் இயேசுவைப் பின்பற்றுகின்றனர், அவர்கள் பட்டினியாக இல்லம் திரும்புவதை இயேசு விரும்பவில்லை. ஆம், ஆசையைக் கடிந்து கொள்கின்ற கடவுள், பசிக்கு உணவு தருகின்றார். பல வேளைகளில் நோக்கமில்லாத பசி நம்மில் ஆசையை தூண்டுகின்றன. தேடலோடும், நோக்கத்தோடும் நம்மில் ஏற்படும் பசி, நமக்கு நிறைவை அளிக்கின்றது. மொத்தத்தில், விலக்கப்பட்ட கனியை உண்டதால் மனுக்குலத்திற்குப் பசி எடுத்தது. ஆகையால், இறைவன் மேலும், ஒருவர் மற்றவர் மேலும், நிலத்தின் மேலும் அவர்கள் கொள்ளும் பசி இன்னும் அடங்கவில்லை. அந்தப் பசியை அடக்குபவை இயேசுவும், அவருடைய பரிவும். அந்த பரிவுள்ளமே மீண்டும் நம்மை புல் தரையில் அமர வைக்கிறது (யோவா 6.10).

**நிறைவை நோக்கி:** 'உண்ட பின்னும் மீதி இருக்கும்' என்று ஆண்டவர் கூறுகிறார் என்ற எ-சாவின் வார்த்தைகளும், எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள் என்ற நற்செய்தியின் பதிவும், பசியாய் இருந்த மக்கள், இறைத்தேட-ல் தங்களை கையளித்த மக்கள், அதனால் நிறைவு பெறுகிறார்கள். அதுவும் அற்புதமாக அந்நிறைவு நடந்தேறுகிறது.

கடவுளிடமிருந்து வரும் திட்டம் என்றால் அதற்கு வெற்றியுண்டு என்பதற்கு பின்வரும் குறிப்பு சான்று. இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கலாம் என்னும் பி-ப்பின் திட்டம் மனிதரிடமிருந்து வருகிறது. ஆக அது தானாகவே அழிந்து விடுகிறது; ஆனால், மக்களை அமரச் செய்யுங்கள் என்னும் இயேசுவின் திட்டம் கடவுளிடமிருந்து வருகிறது. ஆகையால், அங்கு அற்புதங்கள் நிகழ்கிறன. முதல் அற்புதம் - கடற்கரை மணல் புல்தரையாய் மாறுகிறது, இரண்டாம் அற்புதம் - அப்பமும், மீனும் பலுகிப் பெருகுகின்றன. முன்றாம் அற்புதம் - பன்னிரு கூடைகள் நிறைய எஞ்சிய உணவு, நான்காம் அற்புதம் - பன்னிரு கூடைகள் நிறைய மீன்கள். உண்மையான இறைத்தேடல் இருந்ததால் கா-யான கைகள், நிறைந்த கைகளாக, பசியான வயிறுகள், நிறைந்த வயிறுகளாக மாறும் என்பதற்கு இயேசுவின் புதுமையே சான்று.

**செயல்பாடு:**

நம் வாழ்வின் தேடல்கள் புல்தரையை காண்கின்றதா? நம் பசி ஆசையைத் தாண்டி, நிறைவை நோக்கிப் பயணிக்கின்றதா?

நம் தேடல்களும், பசியும்-புல்தரையையும், நிறைவையும் நோக்கிப் பயணிக்கின்றபொழுது அற்புதங்கள் நிகழ்கின்றன நம் வாழ்வில்.

# பெரிய இதயம்



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.

அது ஒரு மாலை நேரம், ஒவ்வொருவரும் தத்தம் பணிகள் முடித்து, அலுவலகங்களிலிருந்து வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர். ஒருசிலர் நான்கு சக்கர வாகனங்களிலும், பலர் இருசக்கர வாகனங்களிலும், மற்றும் சிலர் மிதிவண்டிகளிலும், கால்நடையாகவும் சாலையில் பயணித்துக் கொண்டிருந்தனர். சாலையோரத்தில் சிலர் "இன்னைக்கு பொழப்பு ஓடாதா" என்ற நம்பிக்கையில் நாவல்பழம், நெல்லிக்காய், சோளக்கருது மற்றும் சில பழங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு வாகனத்தையும் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தனர். சிலர் அலுவலகத்தில் அன்று முடித்த வேலைகள் பற்றியும், சிலர் இன்னமும் முடிக்காமல் கிடப்பில் கிடந்த வேலைகள் பற்றியும், சிலர் வீட்டைப் பற்றியும், சிலர் அடுத்தமாத குடும்ப நிதிநிலை (Budget) பற்றியும், சிலர் நீண்ட நாட்கள் சென்றுவர முடியாத தங்களது பூர்வீக ஊர் பற்றியும், பிள்ளைக்கு கட்ட வேண்டிய படிப்பிற்கான கட்டணம் பற்றியும், இப்படி பல சிந்தனைகளோடு ஊர்ந்து கொண்டிருந்தனர். மூளையில் இத்தனைச் சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தாலும், சாலையில் வாகனங்கள் லாவகமாக ஓடிக்கொண்டே இருந்தன.

'சீக்கிரம் வீட்டிற்குச் சென்று சற்று ஓய்ந்தால் தேவலாம்' என்று ஏங்கியவாறு, வாகனங்களை முந்திக்கொண்டு வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தன அவர்களின் மனங்கள். போக்குவரத்து காவலர் ஒருவர் நான்குமுனைச் சந்திப்பில் நின்று கொண்டு வாகனங்களை கண்களால் கண்காணித்துக் கொண்டிருந்தார். போக்குவரத்து சமிக்கையில் சிவப்பு விளக்கு எரிந்தவுடன் எல்லா வாகனங்களும் சற்று நின்று மூச்சு வாங்கின. சிறிய இடைவெளி இருந்தாலும், நாடு பிடிப்பது போல, கொஞ்சம் கொஞ்சமாக முன்னே நகர்ந்து சென்று நின்றனர் சிலர். பச்சை விளக்கு எரிந்தவுடன், விண்வெளிக்கு செல்லும் ராக்கெட் போல, "சர்... சர்..." என்று எல்லோரும் பறக்கத் தொடங்கினர்.

"தடால்" என்று ஒரு சத்தம், எங்கெங்கோ சிந்தனையில் உலாவிக் கொண்டிருந்த எல்லோரும் சட்டென்று நிஜத்திற்கு வந்தனர். சப்தம் வந்த திசையை நோக்கி அனைவரும் பார்த்தனர். "இளம் கன்று பயமறியாது" என்பதை உண்மையாக்குவது போல வாகன நெறிசலிலும் வளைந்து வளைந்து தனது அதிவேக வாகனத்தில் வந்துகொண்டிருந்த ஓர் இளைஞன் நிலை தடுமாறி நிலைகுலைந்து சாலையில் சரிந்தான். அவனை தூக்கி எறிந்துவிட்டு அவனது வாகனம் சீறிச்சென்று சற்று அப்பால் விழுந்தது. "அய்யோ பாவம்!" என்று பரிதாபத்தை மிக எளிதாக உதிர்த்துவிட்டு சிலர் வாகனத்தில் இருந்தபடியே பார்த்துக்கொண்டே சென்றுவிட்டார்கள். "நான் அப்போவே நெனச்சேன், அவன் ஓட்டுன பாவனைய பார்த்தியா நீ" என்று ஒரு கோபக்குரல் பக்கத்தில் முணுமுணுத்துக்கொண்டே சென்றது. யாரோ! எவரோ! முகம் தெரியாதவர்கள், முன்பின் பார்த்திராதவர்கள், சட்டென்று தங்கள் வாகனங்களை ஓரம்கட்டி நிறுத்திவிட்டு பட்டென்று ஓடிவந்து அவ்விளைஞனைத் தூக்கினார்கள். "ஏம்பா! பார்த்துவரக் கூடாதா?", "யாராச்சும் தண்ணி வச்சிருக்கீங்களா?", "இரத்தம் வருது பாரு, கையால நல்லா அழுத்திபிடிய்யா!" "வண்டிய தூக்குய்யா!" என்று ஒவ்வொருவரும் தங்கள் கரிசனையைக் கொட்டினார்கள். லேசான சிராய்ப்புத்தான், அவனுக்கு பாடம் கத்துக்கொடுக்க வந்திருக்கும்போல, இனிமேல் அவ்வளவு வேகம் வாழ்நாள் முழுதும் வரவே வராது.

எல்லோருமே அவசர அவசரமாகத்தான் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களின் அனைத்து அவசரங்களையும் கடந்து, இவர்களின் மனித நேயம் அங்கே காணப்பட்டது. பார்த்துவிட்டு கடந்துபோன மனிதர்களுக்கு அது வழக்கமான ஒரு நாளாகவே இருந்தது. ஆனால் உதவி செய்த உள்ளங்களுக்கோ அது ஒரு நிறைவை, ஏதோ ஓர் இனம்புரியா ஆனந்தத்தை கொடுத்த வரலாற்று நாளாக மாறியது. அந்த நான்கு பேர் யார்? பெயர் தெரியாது, ஊர் தெரியாது. உதவி செய்ய மட்டும் அவர்களுக்குத் தெரியும். அந்த நான்கு பேருக்கும் இதயம் சற்று பெரிதாக, விசாலமாக இருந்தது. அது அவர்களை இன்னும் நீண்ட நாட்கள் இவ்வுலகில் வாழச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நமது இதயத்தின் அளவு சிறியதா? பெரியதா?... ???

## இயேசு மனிதர் இயேசு இறைவன்

குழந்தை அங்கு பிறக்க
உயிரும் அதனில் இருக்க
நாட்கள் சிலவும் செல்ல
பெயரும் அதற்கு உண்டு

உயிரும் இல்லா குழந்தை
பெயரும் இல்லா போகும்
விந்தையாக நிற்க
விளைவை நீயும் அறிவாய்

நினைவு சிந்தையில் எழவே
இறைவன் அங்கு தோன்ற
அவரின் ஆவி பெயரால்
நம்மில் இருக்க கண்டேன்

உயிரும் நம்மில் பிரிய
பெயரும் அங்கு மறைய
புதிய பெயரும் தோன்ற
பிழையும் நமது ஆச்சே

இறைவன் இயேசு பிறந்தார்
அவரும் உலகில் இறந்தார்
உயிரும் பெயரும் உயிர்க்க
மனிதர், இறைவன் ஆனார்

– ஆமென்

J. ஜான், கம்மியன்பேட்டை

# கொரோனா பெருந்தொற்றும் - ஊடக வலையொளி சமய பகிர்வுகளும்

– அருள்பணி. **அந்தோணிராஜ்,**CRS - சென்னை

அலைகள் என்றும் ஓய்வதில்லை! ஆம் வற்றா நதியும் வற்றிப்போனாலும், காற்றலைகள் அமைதியுற்றுப் போனாலும், கடலலைகள் என்றும் ஓய்வதில்லை. ஓயா அலைகளைப் போலவே கொரானா எனும் பெருந்தொற்றும் இணையதள காற்றலை வசதி 1G, 2G, 3G, 4G, 5G என மேம்படுத்தப்படுவதுப்போல, கொரோனா பொருந்தொற்றும், முதல் அலை, இரண்டாம் அலை, மூன்றாம் அலை என ஓயாத அலைப்போல மனித சமூகத்தைப் புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றது. 'ஏதோ இரண்டாம் அலையாமே! இப்போ மூன்றாம் அலை வரப்போகுதாமே. இது வந்தா குழந்தைகளை தான் அதிகம் பாதிக்குமாமே?' எனப் புலம்பும் மக்கள் கூட்டம் ஒருப்புறம் இருக்க, மறுபுறம் கொரோனா என்றாலே என்ன என்று தெரியாத, புரியாத மக்கள் கூட்டமும் இன்னும் இன்றைய சமகால, நவீன, தொழில்நுட்ப காலத்திலேயும் இருக்கிறாகள் என்பதை நாம் மறுக்கவும், மறைக்கவும் முடியாது. சீன நாட்டின் வூகான் மாநிலத்தின் நவீனப் பிள்ளையாக பிறந்த கொரோனா ஒரு பெருந்தொற்று என்று `WHO' உலக சுகாதார அமைப்பினால் மார்ச் 11ம் தேதி 2020ல் அறிவிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை இந்தப் பெருந்தொற்றின் தாக்கம், அதனால் ஏற்பட்ட சமூக பொருளாதார, அரசியல் மாற்றங்கள், மக்களின் நலவாழ்விலும், வளர்ச்சிலும் ஏற்பட்ட பாதிப்புக்கள், ஆகியவைகளைப் பட்டிய-டும்போது விவரிக்க முடியாதவைகளாகவே காணப்படுகின்றன. வேலையிழப்பு, வருமானம் குறைப்பு, பொது முடக்கம், உற்பத்தியின்மை, போதிய தரமான மருத்துவ வசதியின்மை, என ஒன்றன்பின் ஒன்றாக தொடர் கணைகள் சமூகத்தின் மீது தொடுக்கப்பட, மனிதனும் தன் இயல்பு நிலைகளி-ருந்து காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ள முயன்றும் தோற்றவனாகவே உணர்கின்றான்.

**உலகளாவிய புள்ளிவிவரம்:** உலக சுகாதார அறிக்கையின்படி (cest. 12th July.2021) உலகளாவிய அளவில் 186,411,911 கோடி மக்கள் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 40,31,725 பேர் இறந்துள்ளனர், 3,078,787,056 கோடி மக்கள் கொரோனா தடுப்பூசி பெற்றுள்ளனர். இந்திய அளவிலே 3,88,74,376 கோடி மக்கள் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4,08,792 பேர் இறந்துள்ளனர். 1.32% மக்கள் இறந்துள்ளனர். 3,00,14,713 பேர் அதாவது 97.22% பேர் உடல் நலம் தேறியிருக்கின்றனர். இன்னும் நாளொன்றுக்கு 37,676 நபர் பாதிப்புக்குள்ளானவர்களாக கண்டறியப்படுகின்றனர். தமிழ் நாட்டிலே 12.07.2021 வரை 25,18,786 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், இவர்களில் 33,418 (1.33%) பேர் இறந்துள்ளனர், ஏனையோர் நலமடைந்துள்ளனர். புதுச்சேரியிலும், 1.18,976 பேரில் 1769 (1.49%) பேர் இறந்துள்ளனர், 97.25% நலமடைந்துள்ளனர்.

**கொரோனாவால் ஏற்பட்ட பாதிப்பு:** பாதிக்கப்பட்டோர், நலமடைந்தோர், இறந்தோரின் எண்ணிக்கை இவற்றில் அன்றாடம் ஏற்ற இறக்கங்களை சமூகம் கண்டுகொண்டுதான் இருக்கிறது. இந்தச் சூழ-லே சிறுவர்களின் கல்வி, வா-ப இளைஞர்கள், இளம் பெண்கள், முதிர் வளரிளம் பருவத்தில் இருப்போரின் (கல்லூரி மாணவர்கள்) கல்வி என்பது ஒரு புதிராகவும் காணப்படுகின்றது. மனைப்பொருளியல் மிகப்பெரும் பிரச்சனையாக உருவெடுக்க, பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம், வேலைவாய்ப்பு என்பதும் விஸ்வரூபம் எடுத்து தலைவிரித்தாட மனிதன் இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகிறான். அதுதான் சமயமும், சமயம் சார்ந்த ஊடகமும், தொலைக்காட்சி, புலனங்கள், கீச்சகம், அலைவடிவகம், வலையொளி என, பல சமூக ஊடகங்களும் தங்களின் முகங்களை புதுப்பித்துக் கொண்டிருக்கின்றன. செய்திகளை உடனுக்குடன் பகிர்தல் என்பது இன்றைய தொழில்நுட்ப காலத்தின் வரமாக இருந்தாலும், உண்மையான, உறுதியான, சமநிலைச் செய்திகள், என்பது சற்று ஆராயப்பட வேண்டியதாகவே உள்ளது. அதிலும் வலையொளிகளை உருவாக்குபவர்களுக்கு இது ஒரு பணம் ஈட்டும் செயல்பாடாகவும் காணப்படுவதால் அதன் தாக்கம் இன்றைய இளைஞர்களை அதிகமாக ஈர்க்கும் ஆற்றல் பெற்றிருக்கிறது.

**சமயத்தை ஆட்கொள்ளும் வலையொளி:** அறிவு சார்ந்த செய்தித் தொகுப்புக்களைக் கொண்டு ஈர்க்கும் கும்ப-ன் பக்கத்தில், விளையாட்டு, நகைச்சுவை, அறிவியல், கற்பனைகள், ஓவியம், கலை, இசை என பல்துறைகளையும் ஆக்கிரமிப்புச் செய்யும் வலையொளி-சமயத்தையும் ஆக்கிரமிப்புச் செய்து வருகிறது. வலையொளியின் முதன்மையான நோக்கம் என்பது பொறுப்பான வழிகளில், விதங்களில் தகவல்களை வழங்குவதாகும். கூகுள் தேட-ன் இணைப்பாக காணப்படும் வலையொளி, மனிதனின் எல்லா பசிக்கும் இரைப்போடும் கணினி, நுட்ப இயந்திரமாகவே இன்று விளங்குகின்றது. ஆன்மீகம், புரட்சி, பயிற்சி, கற்றல், கற்பித்தல், விளையாட்டு, அரசியல், சுற்றுலா என அனைத்து ஆசைகளுக்கும், விருப்பு வெறுப்புக்களுக்கும் தீனிப்போடும் வலையொளிப் பகிர்வுகள், தகவல் வழங்கல்கள் ஒரு நிமிடத்திற்கு 500 மணி நேர காணொளிகளாக பதிவேற்றம் செய்யப்படுகின்றது என கூகுள் (அ) வலையொளிப் பதிவேற்பு கண்காணிப்பு குழுவினரால் கூறப்படுகின்றது. எனவே அனைத்து பதிவேற்றங்களையும் சிறப்பாக இந்த கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலே கண்காணிக்க பல இணையதள - கூகுள் குழுக்கள் பின்னணியி-ருந்து செயல்படுகின்றார்கள். இக்குழுக்களைப் பொறுத்தமட்டில், வலையொளி உருவாக்குனர்களுக்கு தங்களின் விருப்பங்களை தேர்வு செய்யும்போது, தங்கள் சமூகத்திற்கு உதவிடும் வகையில் தங்களின் குரல்களை, ஆக்கங்களை, கற்பனைகளை பயன்படுத்த சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு என்றே கூறுகின்றது. இந்தத் தொழில் நுட்ப, இணையவழி வசதி வாய்ப்புக்களை ஒவ்வொருவரும் பிறர் நலன் பேணி பயன்படுத்திட கடமையும், பொறுப்பும் கொண்டுள்ளனர்.

– தொடரும்



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி, திருப்பாப்புலியூர், கடலூர்.

## 41. ஆன்மிக வாழ்வு

ஆன்மிகம் என்பது ஆன்மாவைப் பற்றிய ஞானமாகும். ஆன்மாவாகிய தன்னை உணர்ந்து இறைவனோடு சங்கமிக்கும் நெறியாகும். ஆன்மாவை அறிந்து கொள்வதே தன்னை அறிதலாகும். நம் அன்றாட வாழ்க்கையை ஆனந்தமாக கொண்டாடி மகிழும் கலையே ஆன்மிகம். 'ஆன்மிகத்துக்கு ஏற்ற வயது எது?' என்று கேட்டால், 'நலமாக வாழ்வதற்கு ஏற்ற வயது எதுவோ, அதுவே ஆன்மிகத்துக்கு ஏற்ற வயது ஆகும்'. பேரொளியான பரம்பொருளிலிருந்து வந்த சிறு ஒளிக்கீற்றுதான் நாம். பிரிந்தது தன் மூலத்தோடு இணையவே விரும்புகிறது. 'குறையுள்ள ஆத்மா நிறைவான பரமாத்மாவில் சங்கமிப்பது ஆன்மிகம்' என்று அத்வைத மார்க்கம் குறிப்பிடுகிறது. எனவேதான், நம் ஆத்மா எப்போதும் அந்த பரமாத்மாவோடு இணைவதற்கான தேடலில் இருக்கிறது. இந்தத் தேடலை சரிவரப் புரிந்துகொள்ளாமல், உலக இன்பங்களில் திசைத்திருப்பி விடுவதால்தான் நாம் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றோம்.

உலகை வெறுப்பதும், அதிலிருந்து விலகி நிற்பதும் அல்ல ஆன்மிகம். உலகை அறிந்து, புரிந்து, அதனுள் வாழ்ந்தபடியே தன்னையும் பிறரையும் ஒருசேர உயர்த்துவதுதான் உண்மையான ஆன்மிகம். 'எந்த நேரமும் நான் பிராத்தனை செய்தாலும், சான்றோர் அவையில் பங்கேற்றாலும், நீண்ட நேரம் தியானத்தில் ஈடுபட்டாலும், அன்பு, கருணை, இரக்கம் எனது இயல்பாக இல்லையெனில், என் ஆன்மிகம் உண்மையானது இல்லை' என்றார் குஜராத்தி கவிஞர் நரசி மேத்தா. ஒவ்வொரு மனித இனத்தின் வலிமைக்கும் உயிர்நாடி அதன் ஆன்மிகப் பண்பில்தான் அடங்கியிருக்கிறது. என்றைக்கு ஆன்மிகம் தனது செல்வாக்கை இழந்து உலகியல் போக்கு தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்தச் சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்துவிடுகிறது. எனவே ஒவ்வொரு சமூகமும் ஆன்மிகத்தை அடிப்படையாக கொண்ட வாழ்க்கை முறைக்கு தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.

இறைவனை அடைவதில் மதவாதி தொடக்கப் படிக்கட்டிலேயே நிற்பவன். அவன் புற வழிபாட்டில் மூழ்கி, இறைவனை வெளியில் தேடுகிறான். சடங்குகளின் மூலமாக அவன் புறத் தூய்மைக்கு முக்கியத்துவம் தருகிறான். ஆன்மிகவாதியோ பல படிகளைக் கடந்து உச்சியை அடைந்து ஞானம் பெற்றவன். அவன் அக வழிபாடு செய்பவன். அவன் இறைவனை தன்னுள்ளே தரிசிக்கிறான். ஆதலால் அகத் தூய்மையை வலியுறுத்துகிறான். ஆன்மிகவாதி தனது செயல்கள் அனைத்தையும் இறைவனின் திருவடியில் மலர்களாக்கி மகிழ்கிறான். அனைத்து உயிர்களிலும் தன்னையே தரிசிக்கிறான். தெளிந்த அறிவு, ஆழ்மன அமைதி, பொங்கித்ததும்பும் உற்சாகம் அவனது அடையாளங்கள் ஆகின்றன. அவனது வாழ்க்கையே வழிபாடாக மாறுகிறது. அவன் தன்னை ஆளும் ஆற்றல் உடையவனாகத் திகழ்கிறான். நிம்மதியின் விலாசம் அவனுக்குத் தெரிகிறது. பேரின்பத்தில் திளைக்கிறான். இறுதியில் பூ ஒன்று உதிர்வது போல் சத்தமின்றி வலியின்றி இந்த உலக வாழ்வை நிறைவு செய்கிறான்.

நாம் படிக்கும் வேத நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள், நாம் கேட்கும் சான்றோரின் உபதேசங்கள் அனைத்தும் உலகில் நல்லவண்ணம் வாழும் வழியை கற்பிக்கின்றன. கற்றலுடன் நின்று விடுவதில்லை. ஆன்மிகப் பயிற்சி அதன்படி நிற்றலில்தான் நிறைவுறுகிறது. நூலறிவு, பட்டறிவுடன் இணையும்போது அது நுண்ணறிவாக மாறுகிறது. அவரவர் தனது ஆன்மிக ஆற்றலை உணர்ந்து அதில் வளர வேண்டும். வேறு யாரும் நமக்கு கற்பித்து நம்மை ஆன்மிகவாதி ஆக்கிவிட முடியாது. இதற்கு நமது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

குரு ஒருவர் மரணப்படுக்கையில் கிடந்தார். அவர் அருகில் அவரது சீடன் ஒருவன் கவலையோடு அமர்ந்திருந்தான். 'ஏன் இப்படி கவலையாக இருக்கிறாய்?' என்று கேட்டார் குரு. அதற்கு அந்த சீடன், 'குருவே! இதுநாள் வரை நீங்கள் கூறியபடியே ஜெபம், தியானம் செய்து எனது வாழ்க்கையை தொடர்ந்து வருகிறேன். இருந்தாலும் நான் ஆன்மிகத்தில் உயர்ந்த நிலையை அடையும் காலம் எது என்பது எனக்குப் தெரியவில்லை. இப்போது நீங்களும் என்னை விட்டு செல்லப்போகிறீர்கள். இனி நான் எனது ஆன்மிகப் பயிற்சியை எப்படித் தொடர்வது', என்னுடைய சந்தேகங்களை யாரிடம் கேட்பது? அந்த வருத்தம்தான் என்னை துயரத்தில் ஆழ்த்துகிறது' என்றான். குரு அவனிடம், 'கவலைப்படாதே, என்னுடைய படுக்கையின் அருகில் இருக்கும் பெட்டியை எடுத்துக்கொள். அதில் எதிர்காலத்தில் உனக்குத் தேவைப்படும் உபதேசங்களை வைத்திருக்கிறேன். உனது ஆன்மிக வாழ்வில் தொய்வு ஏற்படும் போதெல்லாம் அதை திறந்து வாசி' என்று கூறிவிட்டு இறந்துவிட்டார்.

நாட்கள் சென்றன. சீடனுக்கு தன்னுடைய ஆன்மிகப் பயிற்சியில் எந்த பலனும் கிடைக்கவில்லை. எனவே இலௌகீக வாழ்க்கைக்குத் திரும்பிவிடலாம் என்று நினைத்தான். அப்போது தனது குரு சொன்னது நினைவுக்கு வர, உடனே அந்த பெட்டியைத் திறந்து, அதிலிருந்ததை வாசித்தான். அதன்பிறகான நாளில் அவனுக்கு ஆன்மிகம் கைவரப் பெற்றது. ஆன்மிகத்தின் உயர்ந்த நிலையை அடைந்து மக்களுக்கு கற்பித்து வந்தான். மக்களில் பலர் அவற்றை ஏற்க மறுத்து அவனுக்கு எதிராக கலவரம் செய்தனர். இதனால் மனம் தளர்வுற்ற அவன் மீண்டும் அந்தப் பெட்டியை திறந்து வாசித்து புத்துணர்வு பெற்றான். இவ்வாறு தொடர்ந்து செயல்பட்டு ஆன்மிக ஞானத்தின் உச்சம் கண்டான். அவன் மரணித்தப் பிறகு, அவனது சீடன் ஒருவன் அந்த பெட்டியில் என்னதான் இருக்கிறது என்று திறந்துப் பார்த்தான். அதில் **"உனக்கு நீயே ஒளியாவாய்...இன்னொரு முறை முயற்சி செய்"** என்று எழுதப்பட்டு இருந்தது. அதைக் கடைபிடித்த அவனுக்கும் ஞானம் கைவரப்பெற்றது.

எவரும் நம்மை ஆன்மிகவாதி ஆக்கிவிட முடியாது. நம்மை நாமே சீர்திருத்தி, உயர்த்திக் கொள்ளும் உத்தியே ஆன்மிகம். 'எப்படி வாழ வேண்டும்?' என்ற விழிப்புணர்வுடன் இருப்பதே ஆன்மிக வாழ்வு. ஆன்மிகத்தில் உடனடிப் பலனை எதிர்ப்பார்த்து ஏமாந்து, ஞானம் கைவரும் முன்னே பலர் முயற்சியை கைவிட்டு உலக மாயையில் மயங்கிவிடுகின்றனர். இத்தகைய சிற்றின்ப நாட்டமுடையோர் இன்பத்தைத் தேடி அலைந்து, புலன்களே மரத்துப் போகும் அளவுக்கு புலனின்பங்களை அனுபவிக்கின்றனர். இறுதிவரை இவை அனைத்தும் கானல் நீர், போலி என்பதை உணராமல் அதிலேயே மரித்துப் போகின்றனர். இதனை, 'ஆன்மிக வாழ்க்கையில் பேரின்பம் பெறாமற் போனால் அதற்காகப் புலனின்ப வாழ்க்கையிலா திருப்தியை நாடுவது. அமுதம் கிடைக்காமற் போனால் அதற்காகச் சாக்கடை நீரையா நாடிச் செல்வது!' என்று கடிந்துகொள்கின்றார் விவேகானந்தர்.

வசந்தம் வீசும்...

# 16 புனித வளனாரின் ஆண்டு செபம் விளக்கம்



அருள்திரு.M.லூர்து ஜெயசீலன்,
பங்குத்தந்தை, வடலூர்.

## அருளையும், இரக்கத்தையும், துணிவையும் எமக்கும் பெற்றுத் தாரும்

**அருள்:** "கடவுளின் ஆசீர், இலவசமான கொடை, நமக்கு எந்த விதத்திலும் உரிமையில்லாதது, அதன் மூலம் அவருடைய அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ளவும், அவருடைய பிள்ளையாக வாழவும், அவருடைய இறையியல்பில் பங்கெடுக்கவும், நித்திய வாழ்வைப் பெறவும் நமக்கு இறைவன் கொடுக்கிறார்" (CCC1996). மேலும் அருள் என்பதை மிகுதியானது, இலவசமானது, எதிர்பார்ப்பு இல்லாதது, கொடுக்கவேண்டிய கட்டாயமில்லாதது, கடவுளின் அன்புக் கொடை என்றும் நாம் புரிந்து கொள்ளலாம்.

**இரக்கம்:** இரக்கம் என்பது தவறு செய்பவர் மீது காட்டும் மன்னிப்புச் செயல். தண்டனை பெறவேண்டியவர்களுக்கு மன்னிப்பு கொடுப்பதுதான் இரக்கம். இரக்கம் என்பதை "கருணை, அருள், தயை, கிருபை, உருக்கம், கண்மயம், காருண்யம், தாட்சிணியம்" என்றும் புரிந்துகொள்ளலாம். "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றவேலையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக" (எபி4/16) என்றும், "கடவுள் மிகுந்த இரக்கமுடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார்" (எபே2/4) என்று விவிலியத்தில் வாசிக்கின்றோம்.

**துணிவு:** துணிவை தைரியம், மனஉறுதி, நெஞ்சரம் என்று புரிந்துகொள்ளலாம். துணிவு என்பது எல்லா சூழலையும் எதிர்கொள்ளும் மனநிலை அல்லது மனவுறுதி. "துணிவு என்பது உண்மையை நிலை நாட்டுவதற்கான திடமான மனநிலை" (CCC1803). ஒருவன் நல்ல செயலை செய்வதற்கு மட்டுமல்ல, தனக்குள் உள்ள நல்லதை வெளிக்கொணர்வதற்கான மனநிலை என்றும் புரிந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்து துணிவைப் பற்றிச் சொல்லும்போது, "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டு விட்டேன்" (யோவா16/33) என்கிறார். புனித பவுலடிகளாரும் பல இடங்களில் துணிவுடன் இருங்கள் என்று சொல்லுகிறார். "விழிப்பாயிருங்கள், நம்பிக்கையில் நிலைத்திருங்கள், துணிவுடன் நடந்துகொள்ளுங்கள், வலிமையுடன் செயல்படுங்கள், அனைத்தையும் அன்போடு செய்யுங்கள் (1கொரி16/13) என்று கூறுகிறார்.

**அருளும் புனித வளனாரும்:** புனித வளனார் இறைவனிடம் பரிந்து பேசுவதில் மரியாவுக்கு அடுத்த நிலையிலும், புனிதர்களுக்கு உயர்ந்த நிலையிலும் உள்ளார். பாவத்தில் மடிந்துபோன மக்களுக்கு கடவுளின் அருளை தனது மீட்புப் பணியின் மூலம் கொடுக்க வந்தவர் இயேசு கிறிஸ்து. அவருடன் வாழ்ந்ததால், அவரின் வளர்ப்புத் தந்தையாக பயணித்ததால் அவரிடம் பரிந்து பேசுவதில் உயர்ந்த வல்லமை பெற்றவர் புனித வளனார். எனவே கடவுளின் அருளை நமக்குப் பெற்றுதர வல்லவர் புனித வளனார். இறைமக்கள் ஒவ்வொருவரும் மீட்பு பெற, இறையருளைப் பெற புனித வளனாரின் பரிந்துரை வேண்டி நாம் மன்றாட வேண்டும்.

**இரக்கமும் புனித வளனாரும்:** தவற்றுக்கு மன்னிப்பு கொடுப்பதுதான் இரக்கம். நமது பாவங்களுக்கு மன்னிப்பு பெற நமக்கு ஒரே மீட்பர் இயேசு கிறிஸ்துதான். அவரிடம் செல்வதற்கு சிறந்த வழி அன்னை மரியாவுக்கு அடுத்த நிலையில் புனித வளனார்தான். புனித வளனார் தனது வல்லமையுள்ள பரிந்துரையால் நமக்கு கடவுளின் இரக்கத்தைப் பெற்றுத்தருவார். அவர் இயேசுவையும், அன்னை மரியாவையும் பாதுகாத்ததுபோல் நம்மையும் பாதுகாப்பார். நமது துன்பத்திலும், துயரத்திலும், கஷ்டத்திலும், பாவத்திலும் நமக்காக பரிந்து பேசி தனது மகனிடம் இரக்கத்தை பெற்றுத்தருவார்.

**இரக்கமும் புனித வளனாரும்:** புனித வளனார் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக துணிவுடன் செயல்பட்டவர். கடவுளின் திட்டத்தை ஏற்றுச் செயல்படும் போது எல்லா நிலைகளிலும் துணிவுடன் செயல்பட்டவர். "அவர் வீரமிக்க தந்தையாக செயல்பட்டவர்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூருகிறார். நமது எல்லா இக்கட்டான சூழ்நிலையிலும் கடவுள் தனது வல்ல செயல்களால் அதிலிருந்து விடுபடும் வழியை நமக்கு காட்டுகின்றார். அத்தகைய வழியை கண்டுபிடிக்க நமக்கு துணிவு வேண்டும். நாசரேத்துவில் வாழ்ந்தபோது புனித வளனார் தனது ஆற்றல்மிக்க துணிவால் தனது குடும்பத்தைப் பாதுகாத்தார். நாமும் நமது வாழ்வில் வரும் இடர்பாடுகளைக் கடந்து செல்ல துணிவினை புனித வளனார் வழியாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

## அருளும், இரக்கமும், துணிவும் எமக்குப் பெற்றுத்தாரும்

1. நாம் மீட்பு பெற இறைவனின் அருள் நமக்கு வேண்டும். எனவே இறையருளைப் பெற புனித வளனாரின் பரிந்துரை நமக்குத் தேவை என்பதை உணரவேண்டும்.
2. இரக்கம் என்பது இறையருளின் தொடர்ச்சி. நமது பாவங்கள், தீமைகள், குற்றங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட நாம் இறைவனின் இரக்கத்தைப் பெறவேண்டும். அதற்காக புனித வளனாரின் பரிந்துரை வேண்டி மன்றாடவேண்டும்.
3. இரக்கத்தைப் பெற்றவர்கள் நல்லவர்களாக வாழவேண்டும். அதற்கு துணிவு மிகவும் முக்கியம். அதற்கு நாம் புனித வளனாரிடம் துணிவை கற்றுக்கொள்ள வேண்டும்.
4. எல்லா சூழ்நிலையிலும் புனித வளனார் நம்மை இறைத்திட்டத்திற்கு ஏற்ப பாதுகாத்து வழிநடத்துவார் என்று நம்பி அவரிடம் வரவேண்டும்.
5. அருளும், இரக்கமும், துணிவும் பெற்று புனித வளனார் வழியாக இயேசுவிடம் வந்து நாம் மீட்புபெற வேண்டும் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.



# உப்பாக இருப்போம்

– திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

மகத நாட்டு அரசரின் அரண்மனை விழாக் கோலம் பூண்டிருந்தது. அரசனுக்கு 60வது பிறந்த நாள் விழா. அரண்மனை குருக்கள் மந்திரங்கள் சொல்லி கடவுளுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து கொண்டிருந்தனர்.

மக்கள் எல்லோரும் புத்தாடை அணிந்து அரசனைப் பார்த்து வாழ்த்து தெரிவித்தனர். அனைவருக்கும் அரண்மனையில் அறுசுவை விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை அரசர் நந்தவனத்தில் அமர்ந்து தனது மூன்று இளவரசர்களிடமும் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருக்கும் போது, "தன்னைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

மூத்த மகன் அவரை வைடூரியமாக மதிப்பதாகச் சொன்னான். மன்னருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இளைய மகன் அவரைத் தங்கக் கட்டியாக மதிப்பதாகச் சொன்னான். அரசர் அளவு கடந்த மகிழ்ச்சியில் திளைத்துப் போனார்.

மூன்றாவது மகன் அவரைப் பார்த்து, "அப்பா நான் உங்களை உப்பு போல மதிக்கின்றேன்'' என்றான். அரசருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "நான் என்ன உப்புக்கல்லா? அவ்வளவு கேவலமாகப் போய்விட்டேனா? என்னை அவமானப்படுத்துகின்றாயா? யாரங்கே இவனை கைது செய்து சிறையில் அடையுங்கள்" என்றார் அரசர். சேவகர்களும் அவ்வாறே செய்தனர். இதைக் கேள்விப்பட்ட அரசி மிக வேதனை அடைந்தார்.

அன்று இரவு உணவை அரசியே தயாரித்திருந்தார். உணவு உட்கொள்ள அரசரும் வந்து இருக்கையில் அமர்ந்தார். அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. ஒரு கவளம் எடுத்து வாயில் வைத்த அரசர் உடனே அதை வெளியேத் துப்பினார். ''உப்பில்லாமல் என்ன சமையல் செய்திருக்கின்றாய்'' என்று அரசியை வசை பாடினார் அரசர்.

உடனே, அரசி, "மன்னா கேவலமான உப்பை உணவில் போடலாமா? அது உணவை அவமானப்படுத்துவதாகாதா? அதனால்தான் போடவில்லை. இதோ பாருங்க வைடூரியம், தங்கம். இவைகளைப் போட்டுச் சாப்பிடுங்க'' என்றார் நக்கலாக.

சிறையில் வாடும் மகனை நினைத்து ஞானமாய்ச் சொன்ன அரசியின் வார்த்தைகள் அரசருக்குப் புரிய ஆரம்பித்தன. உடனே இளவரசனைச் சிறையிலிருந்து விடுவித்து அவனோடு அமர்ந்து உணவு உட்கொண்டார்.

வைடூரியம் மற்றும் தங்கம் விலை மதிப்புள்ள அழகுக் காட்சிப் பொருட்கள். மனித வாழ்க்கையில் அதனுடைய ஈடுபாடு மிகக் குறைவு. ஆனால் உப்பின் பயன்பாடு இவைகளைக் காட்டிலும் மிக அதிகம். தன்னை முழுவதுமாக மறைத்து, தான் சேரும் இடத்தில் சுவையைக் கூட்டி மகிழ்விப்பதுதான் உப்பின் மகத்துவம்.

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள்'' (மத்:5/13) என்று இறைவன் கூறுகின்றார். எப்போதும் நாம் பிறருக்குப் பயன்படும் உப்பாக இருப்போம். நாம் வாழும் இந்த மண்ணுலகை மகத்துவமாக்குவோம்.

# ஆன்லைன் வழிபாடு



திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

"அம்மாச்சி, இனி நான் கோயிலுக்குப் போகமாட்டேன். உங்கள மாதிரியே வீட்டிலிருந்தபடியே பூசை காணப் போறேன்'' என்று சொன்னான் பதினைந்து வயது பேரன் ஆல்பெர்ட்.

''ஏம்பா, உனக்கென்ன வயசாயிடுச்சா? என்னால கோயிலுக்குப் போக முடியல. அதனால வீட்டிலிருந்துகிட்டே பூசை பாக்குறேன். உனக்கென்ன? நீ சின்ன புள்ளதானே. இப்பதான் கோயிலைத் தொறந்துட்டாங்களே. தேர்த்திருவிழாக்கள் தவிர மற்ற வழிபாடெல்லாம் செய்யலாம்னு அரசாங்கம் சொல்லிடுச்சே.''

"அதில்லை அம்மாச்சி. கோயில்ல கூட்டம் கூடினா கொரோனா வந்துடும்னு சொல்றாங்க. அதுவுமில்லாம, கோயிலுக்குப் போறதும் வீட்டிலிருந்தபடியே தொலைக்காட்சியில பாக்குறதும் ஒண்ணுதான.''

"அதெப்படி ஒண்ணாகும். எல்லாத்தையும் ஆன்லைனில் செய்துகொள்ள முடியும்னா - "முடிவெட்டிக்கிறது, மருத்துவ சிகிச்சை - இதயெல்லாம் ஆன்லைன்ல திருப்தியா கிடைக்குமா? அரசிடம் கேட்டுப் பெறவேண்டியதை நேரில் போகாமல் ஆன்லைன்ல முடிச்சுக்க ஏலுமா? நேர்முகத் தேர்வுக்கு நான் நேர்ல வரமாட்டேன். ஆன்லைன்லயே முடிச்சுக்கோங்கனு சொல்லிடுவியா? பேங்க்ல ஏதாவது பிரச்சன வந்தா ஆன்லைன்லயா முடிச்சுக்குவ? காத்துவாங்க பீச்சுக்குப் போவாம ஆன்லைன்ல வாங்க முடியுமா? சாப்பிடாம ஆன்லைன்ல பதார்த்தங்களைப் பாத்து பசியாறிக் கொள்ளலாமா?

சரி. கோயிலைப் பற்றி பைபிள்ல என்ன சொல்லியிருக்கு? தெரியுமா? நோவா காலத்தில வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுச்சு. வெள்ளம் வடிஞ்சதும் நோவா ஒரு சின்ன கோயிலை வடிவமைக்கிறாரு - கடவுளைச் சந்திப்பதற்காக - அவரிடம் பேசுவதற்காக **(தொ.நூ.8:20).** யாக்கோபு 'கரான்' என்னும் ஊர்ல படுத்து தூங்குறாரு. அப்பொழுது ஒரு கனவு. அதில் நெலத்தில ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனிமேலே வானத்தைத் தொட்டுக்கினு இருந்தது. அதில் கடவுளுடைய தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தாங்க. கண்விழிச்ச யாக்கோபு "ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார். இதுவே இறைவனின் இல்லம், விண்ணுலகின் வாயில்'' (**தொ.நூ.28:16-17**) என்று சொல்லி அந்த இடத்தை கடவுளின் இல்லமாகக் கருதினாரு. விடுதலைப் பயண நூலில் மோசே இறைவனைச் சந்திப்பதற்காக ஒரு 'சந்திப்புக் கூடார'த்தைக் கட்டுகிறார் (**விப.33:7-11**). கோயில 'இறைவேண்டலின் வீடு'ன்னு இயேசுவே புதிய ஏற்பாட்டில் சொல்றாரு (**மாற்கு11:17, லூக்கா 19:46**). இது மட்டுமில்ல. திருப்பாடல்கள்ல தாவீது அரசர் கடவுளோட பேரன்ப நெனச்சு உருகி, 'இறையச்சத்துடன் ஆண்டவருடைய இல்லம் சென்று பணிந்திடுவேன்'(**தி.பா. 8:9, தி.பா. 5:7**) அப்படின்னு சொல்றார். ஆகவே, நாமும் இறையச்சத்துடன் ஆண்டவருடைய இல்லம் சென்று அவரைப் பணிந்து போற்றி வாழ்த்தி ஆராதிப்பதுதான் ரொம்ப நல்லது'' என்று ஒரு நீண்ட மறையுரை ஆற்றி முடித்தார் கேதரீன் அம்மாச்சி.

சடப்பொருள் மூலமாக தேவனைத் துதிப்பதற்கும் நேரடியாக கோயில் என்ற இறைப்பிரசன்னம் தங்கியுள்ள இடத்திற்கு சென்று வழிபடுவதற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்த நான், இனி இறைவனின் இல்லம் சென்று மனதார துதிப்பதென்று முடிவு செய்தேன். நீங்களும் தானே!



# இயேசுவின் சிந்தனை

– சுவாமி ஆ. லூயிஸ்.

இறைவன் தனது வெளிப்பாட்டின் நிறைவாக தனது ஒரே மகன் இயேசு கிறிஸ்து வழியாகத் தன்னையும், தனது மகனையும், தூய ஆவியாரையும் மனித குலத்திற்கு அருளுகின்றார். அவருடைய சிந்தனைகள் அவருக்குரியதல்ல, தந்தையிடமிருந்து பெறுவதைப் பகிர்ந்து கொண்டார். அவையே திருநூ-ல் பதிவாகி நமது புதையலாக நம்முடன் பயணம் செய்கிறது. நமது சொந்த முயற்சியைவிட இறைவன் அருளால் அவரது வாக்கையும், ஆவியையும் நாம் ஓரளவு புரிந்து நம்ப இயலும். இதில் இடம் பெறும் போராட்டம் ஓய்வடையாமல் காலமெல்லாம் பயணிக்கின்றது. எனவேதான் இயேசு புனித இராயப்பரிடம் அதிகாரத்தைக் கொடுத்து, தூய ஆவி வழியாகத் திருச்சபையை வழிநடத்தி வருகிறார்.

**இறைச் சிந்தனை:** நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். உமது திருவுளம் நிறைவேறுக என்பதே அன்னையின் மகனின் மந்திரமாக எப்போதும் இருந்தது. நாமும் அதைப் போல வாழ்வது கடவுள் காட்டும் வழியாகும். சிந்தனை என்பது நமக்குக் கடவுள் கொடுத்த கருவியாகும், கர்த்தர் என்பவர் அவர் அருளும் உயிர்த்த ஆண்டவரின் ஆவியாகும்.

இயேசு இறைவனுடைய வாக்கு என்பதால் தனக்கென எல்லாம் தெரிந்திருந்தாலும் எப்போதும் இயேசு கடவுளின் ஆற்றலான வார்த்தையையும், அவருடைய ஆவியாலுமே வழிநடத்தப்பட்டார் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் நன்கு உணர்ந்து நமக்கென எதுவும் இல்லாது, எல்லாம் அவருடைய அருள் என்று பணிவோடு, கனிவோடு, துணிவோடு இருப்பது நமக்கு நல்லது.

**வழிவாய்மை வாழ்வு:** கடவுள் தனது அன்பு குழந்தைகளில் ஒருவரையும் இழக்காமல் ஈடேற்ற, தனது ஒரே மகனை அனைத்துமாக அனுப்பி மீட்பதை உணர்ந்து என்றும் இறைவனைப் புகழ்ந்து போற்றுவோம். 'நானே வழி, நானே நல்லாயன் என்னிடம் வாருங்கள்' என்ற அருள்வாக்கு அனைவருக்கும் வாழ்வை நிறைவாக அளிக்க, பொங்கி வழிய, கடவுள் கொடையாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார். யாருக்கும் எவ்வித பயமும் தயக்கமும் வேண்டாம். இயேசுவில் தான் முழுமையான அமைதி கிடைக்கும்.

இயேசுவின் தனித்தன்மையையும், அவருடைய பொதுத் தன்மையையும் நாம் சரியாகப் புரிந்து கொள்வோம். இயேசு அனைவருடனும் இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. படைப்பில் வாக்காகவும், மீட்பில் விடுதலை வீரராகவும், புனிதப்படுத்துவதில் அன்பின் ஆற்றலாகவும் இருப்பவரை உணர்வோம். இயேசுவின் இடத்தை அவர்தான் நிரப்ப இயலும், சமரசம் என்பதற்கு இடமில்லை.

பல வழிகளையும், பாதைகளையும், நெறிமுறைகளையும் இயேசுவுக்குமுன் கடவுள் மனித குலத்திற்குக் கொடுத்து வந்தார். அதன் நிறைவாக கடவுள் இயேசுவை முழுமையின் மெய்மையாக அளிப்பதை புனித பவுலடியார் எபிரேயருக்கு எழுதியத் திருமுகத்தில் தெளிவுபடுத்துகின்றார்.

**அவரின் சிந்தனை:** இயேசு எதையும் தன்னிச்சையாக சொல்லவும் இல்லை, செய்யவும் இல்லை. தந்தையின் திருவுளத்தை ஆவி வழி நடத்த இயேசு பணிவோடு சான்று பகர்ந்தார். சுயநலத்திற்கு இயேசுவின் வாழ்வில் கடுகளவுக்கும் இடமில்லை. இவ்வாறுதான் திருச்சபையில் இருப்பவர்களாகிய நாம் சான்று பகரவேண்டும் என்பது நெறியாகும்.

சுயநலத்தின் சோதனை நம் யாரையும் விட்டு எளிதில் விலகாது. சுயநலத்தில்தான் நமது கவனம் எப்போதும் இருக்க வேண்டும். இது இயேசுவின் பிரியமா? என்ற வினாவுக்கு நாம் சரியாக, முழுமையாக, தொடர்ந்து பதில் அளித்தால் நமது பாதை சரியாக இருக்கும். நமது அன்னை மரியாவைப் போல, இதோ ஆண்டவருடைய அடிமை, உமது வார்த்தையின்படி ஆகட்டும் என்று வாழ, விசுவசிக்க, சான்று பகர நாம் அனைவரும் கற்றுக்கொள்வோம். திருச்சபை அதிகாரப்பூர்வமாகச் சொல்வதைப் பணிவுடன் கேட்போம். திருச்சபையின் மீதுள்ள நம்பிக்கையை என்றும் வளர்த்தெடுப்போம்.

## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி




தோற்றம்: 29.11.1939



மறைவு: 22.07.2016




### திரு. S. ஜோசப் தார்சியுஸ்

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம், இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்." (உரோமை.14:8)

அன்பின் ஊற்றே இறைவா! எங்கள் அனைவரின் அன்புக்குப் பாத்திரமாக, எங்கள் மத்தியில் வாழ்ந்து, எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து, உம்மால் அன்புடன் அழைக்கப்பட்ட அன்னாரின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பிரகாசத்தையும் அளித்தருளும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 22-07-2021 அன்று காலை 6.00 மணிக்கு பாக்கமுடையான்பேட், புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

அன்பின் நினைவாக

**மனைவி, மகன், மகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

# விண்ணக வாழ்வின் 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது: 13-02-1932



உதிர்ந்தது: 23-07-2009

**இரக்கம் நிறைந்த இயேசுவே! எங்கள் குடும்பத்தில் அனைத்து உறுப்பினர்களையும், உறவினர்களையும், புன்னகையால், அரவணைத்து எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இருந்து தான் பட்ட கஷ்டங்களை, உமது சிலுவையின் பாரத்தில் பங்குகொண்டதாக உணர்ந்து, உம்மிடம் வந்துள்ள**

## திரு. A.J. Lourdes NATHAN

**(Rtd. Assistant Commissioner of Pondicherry Municipality)**

**அவர்களுக்கு, உமது நித்திய ஒளியை அளித்து, உமது புனிதரின் கூட்டத்தில் சேர்த்தருளும், ஆமென்.**

பிரிவால் துயருறும்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

மற்றும் குடும்பத்தினர்.

## திரு. A.J. Lourdes NATHAN

*(Rtd. Assistant Commissioner of Pondicherry Municipality)*

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 23-07-2021 அன்று காலை 6.15 மணிக்கு புதுவை புனித ஜென்ம ராக்கினி பேராலயத்திலும், மதியம் 12.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும் திருப்ப- நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

---

### விண்ணக வாழ்வின் 29-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 16-04-1959



இறப்பு: 18-07-1992

**Sr.A.செல்வி(எ)அமலி C.O.Ch. Mumbai**

"இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே" (2திமோ.4.8).

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 18-7-2021 காலை 5.30 மணிக்கு அணிலாடி தூய இதய ஆண்டவர் ஆலயத்திலும், காலை 7 மணிக்கு புதுவை நெல்-த்தோப்பு விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும் திருப்ப- நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம இளைப்பாற்றிகாக செபிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும் அம்மா**

Sr.இம்மாகுலேட், Presentation Convent

சகோதரர்கள், சகோதரி மற்றும் குடும்பத்தினர்

அணிலாடி.

### விண்ணக வாழ்வின் 21-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 21-04-1928



வார்த்தைப்பாடு: 20-05-1947

மறைவு: 20-07-2000

**மதர்.எமிலியா மேரி**

"எழு! ஒளி வீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது." எசா.60:1

**20-7-2021 அன்று காலை 6.30 மணிக்கு அரியாங்குப்பம், தூய இதய மரியன்னை சபை கன்னியர் முதியோர் இல்லத்திலும், காலை 6.15 மணிக்கு முத்தியால்பேட்டை கர்மேல் மடத்திலும் நினைவுத் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**அன்னையின் பிரிவால் துயருறும்**

ஞானப்பிள்ளைகள்

அமலா மார்டின் கென்னடி

குடும்பத்தினர்.

### விண்ணக வாழ்வின் 14-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 05-09-1929



மறைவு: 25-07-2007

**திருமதி.கண்ணம்மாள் ஜோசப்**

"சீவியத்தில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் உம்மை மறவோம்"

எங்கள் அன்பு இறைவா! விண்ணகம் அடைந்த எங்கள் தாய் திருமதி. கண்ணம்மாள் ஜோசப் என்ற உமது அடியாருக்கு நித்திய சாந்தி அளித்து உம்முடைய புனிதர்கள் கூட்டத்தில் சேர்த்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

**பிரிவால் துயருறும்**

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புதுவை.

# விண்ணக வாழ்வின் 40-ஆம் நாள் நினைவேந்தல்

**(12-07-2021)**











மண்ணில்
24-02-1943

விண்ணில்
03-06-2021

திருமிகு. **பிரான்சிஸ் ஆ. ரோச்** M.A.,(U.S.A.), B.A.(Litt), M.Ed.

Most Respected. **FRANCIS A. Roche**

Retd. Principal

St.Joseph's Nursery School & Baba Mat. Hr.Sec.School, Cuddalore.

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான் 11:25

**அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இந்த 40 ஆம் நாள் நினைவு நாளில் (12-07-2021 திங்கட்கிழமை) ஆழமான செபத்துடன் மாதா தொலைக்காட்சி மூலமாக ஒப்புக்கொடுக்கப்படும். நீத்தார் நினைவஞ்ச- (3.22pm IST), திருப்ப- (6.00 pm IST) மற்றும் செபமாலை (8.00pm IST) ஆகியவற்றில் பங்கெடுத்து மன்றாட வேண்டுகிறோம்.**

பிரிவிலும் நம்பிக்கையுடன் மன்றாடும்

**மனைவி:** Mrs. P. Mary Jecintha Roche, B.A.,B.Ed.

**பிள்ளைகள்:** F. Jerome Leonard Roche, M.B.A.,
F. Felix Benedict Roche, M.C.A.
F. Mary Cecilia Roche, B.E., M.B.A.
F. Patrick Jayaraj Roche, B.Tech., M.E.

கடலூர்.

புனித சூசையப்பர் ஆண்டு

# தூய பேதுரு விவி-யக் குறுக்கெழுத்துப் போட்டி-215

**ஜீலை மாத வெளியீடு 2021**

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ், தாராபுரம்.

அன்புக்குரியவர்களே வாரம் தவறாமல் 115 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகர் பெருமக்களுக்கு செபம் நிறைந்த வாழ்த்துக்கள். நாம் தேடிச் செல்லவும், நம்மைப் பிறர் தேடி வரவும் நல்ல உள்ளம் அவசியம். அத்தகைய நல்ல உள்ளம் நிறைந்தவர்களை இந்த நவீன உலகம் தேடுகிறது. பணம், பதவி, பட்டம், புகழ் என எல்லாம் இருந்தும் தங்கள் வாழ்வின் ஏக்கங்களைப் பகிர்ந்து கொள்ள துன்பங்களில் துணையாயிருந்து தோல்விகளில் தூக்கிவிட ஒருவரைத் தேடி இந்த மனித சமூகம் ஓடிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு தேடும் மக்களுக்கு நல்ல ஆயனாக, வழிகாட்ட இயேசு வருகின்றார். அருகில் வாழ்பவர்கள், உடன் தோழர்கள், நாம் சந்திப்பவர்கள் எனப் பலர் நமது உடனிருப்பை, ஆறுதலை தோழமையை எதிர்பார்க்கின்றனர். இதனை உணர்ந்து இயேசுவைப் போல் பலருக்கு ஆறுதலைக் கொடுக்க இறை அருளை வேண்டுவோம். இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

குறிப்பு : பதில்கள் 18-08-2021 க்குள் அனுப்பி வைக்கவும்.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

பதிலை அதிகாரம், வசனத்துடன் அலைபேசி எண், சரியான முகவரியுடன் இணைத்து அனுப்பவும்.

பதில்களை உள்நாட்டு அஞ்சல் தாள் அல்லது 5 ரூபாய் அஞ்சல் தலை ஒட்டிய மேலுரையில் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

இறை ஊழியன்

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ்.

**எசேக்கியேல 21 முதல் 48 வரை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | | | | | 5 | 17 | ▨ | 15 | |
| 2 | | | | ▨ | 4 | | ▨ | | |
| 21 | | 26 | 3 | | | 13 | 12 | | 25 |
| 27 | | | 18 | | | | | | 1 |
| 28 | | | | 6 | | | | | |
| | ▨ | | | 19 | | 8 | | | |
| | | 24 | 22 | | | | | | |
| | | | | | | | | | |
| 23 | | | | | ▨ | | 20 | 7 | 16 |
| 10 | 29 | | | 11 | | | | | 9 |

**இடமிருந்து வலம்:**

2) நீ உன் நாள்களை ...............விட்டாய்.

6) கடற்கரை ............. அதிராவோ?

10) ............... நாடு, பாழடைந்த பாலை நிலமாகும்.

14) ஒரு மரக்கால் ............இருக்க வேண்டும்.

18) .............பெண்ணையோ, மனமுறிவு பெற்ற மங்கையையோ மணமுடித்தலாகாது.

21) உப்புத் ...........அவற்றை ஆண்டவருக்கு எரிப-யாய் அளிக்க வேண்டும்.

27) சிகரத்தி-ருந்து ..............நோக்கி இருந்தன.

28) அதன் .............அறைகளுக்குச் செல்ல இயலும்.

**வலமிருந்து இடம்:**

1) அது மீண்டும் ................இடப்படாது.

5) ..............என்று கூறி அக்களித்தீர்கள்.

9) உன்னை.............கற்கள் நடுவினின்று வெளியே தள்ளினேன்.

13) வ-மையின் .................முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

19) என் மந்தையைத் ..................போவேன்.

**மேலிருந்து கீழ்:**

4) நறுமணப் .......................கலந்துவிடு.

8) செல்வத்தினாலே உன் ..............செருக்குற்றது.

12) அதன் தீச்செயலுக்குத் ..............அதனை நடத்துவான்.

15) ...............கொல்லப்படுவோரோடு எகிப்தின் மக்கள் வீழ்வர்.

17) விற்கவோ .............மை மாற்றம் செய்யவோ கூடாது.

22) உன்னிலுள்ளோர் ................கொள்வர்.

24) கோவி-ன் தூயகத்தை உள்ளடக்கிய பகுதி நடுவில் இருக்கும்.

26) அவற்றின் கனிகள்................

**கீழிருந்து மேல்:**

3) அவர் கூறுவது.................நீங்கள் எனது தூயகம்.

7) அவர்கள் உன் ............ஆயினர்.

11) லெபனோனை................மூடுவேன்.

16) ................மந்தையை அன்றோ மேய்க்க வேண்டும்.

20) .............மேல் அவர்கள் மக்களுக்குக் கொள்ளைப் பொருளாய் இரார்.

23) ............என்பது பத்துக் குடங்கள்.

29) .................நோக்கித் தண்ணீர் வருவதைக் கண்டேன்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**

❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்,**

**தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-214**

தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்

தாராபுரம் – 638 656, திருப்பூர் –Dt. செல்: **95979 75430**


**மிஷன் அச்சக வெளியீடுகள்**

**புதிய புத்தகங்கள் தற்போது விற்பனையில் உள்ளன**



**இறைவனின் அன்னையின் அற்புதமான வரலாறு**

**எடுத்து வாசி பாகம் - I, II**

ஆசிரியர் :

Bro. K.பெர்னார்டு, SFO

விலை: 150.00



**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Very Rev. Msgr. A. Arulanandam.**
Manager : **Very Rev. Msgr. A. Arulanandam.**